செ.வெ.எண்-44 நாள்-24.08.2021

**அரியலூர் மாவட்டம்**
**மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தொல்.திருமாவளவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் குழுத்தலைவர் / சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.தொல்.திருமாவளவன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (24.08.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதியிலிருந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் 100 நாட்களுக்கு குறையாமல் வேலை அளிக்கவும், ஒதுக்கீடு பெறப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்கவும், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகளை உயர்ந்து தரத்துடன் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும், பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளில் நிலுவையிலுள்ள கட்டுமானப்பணிகளை விரைந்து முடித்திடவும், தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டு வரும் தனிநபர் இல்லக்கழிவறைகளின் கட்டுமானப் பணிகள் குறித்தும், திறந்த வெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் சுகாதார சீர்கேடு குறித்தும், தனிநபர் இல்லக்கழிவறைகளை முழுமையாக பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்டகீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப்பணிகள், பள்ளிகளுக்கு வழங்கப்படும் தளவாட சாமான்கள், உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல் உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விரைந்து முடிக்கவும், மேலும் அரியலூர் மாவட்டத்தில் பிரதம மந்திரி கிராம முன்னோடி திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்கள் அதிகம் வசிக்கக்கூடிய 8 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு கிராமத்திற்கும் தலா ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தீனதயாள் உபாத்ய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டம், வருமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம், தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம், மின்னணு குடும்ப அட்டை வழங்குதல், கோவிட்-19 பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின்கீழ் கூடுதல் அரிசி வழங்கும் திட்டம் குறித்தும், தேசிய சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகைகள் பெறும் பயனாளிகள் குறித்தும், தேசிய நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் மின்ஆளுமை பொது சேவை மையத்திட்டத்தின் மூலம் நில ஆவணங்கள் வழங்கப்பட்டு வருவது குறித்தும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் தீன் தயாள் உபாத்தியாயா கிராம் ஜோதி யோஜனா திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் குறித்தும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள், மண் வள அட்டை வழங்குதல், பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத் திட்டம் உள்ளிட்டவைகள் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மக்களின் வாழ்வாதாரத்திற்காக மத்திய அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் பொதுமக்கள் விரைவாக பயன்பெறும் வகையில் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.தொல்.திருமாவளவன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், மதிய உணவுத் திட்டம் குறித்தும், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலம் பயிற்சிகள் குறித்தும், பொது சேவை மையங்களின் பயன்பாடுகள் குறித்தும், தொலைத்தொடர்பு, அஞ்சல் துறை, இரயில்வே, நெடுஞ்சாலை, நீர்வழிப்பாதை மற்றும் சுரங்கம் செயல்பாடுகள் குறித்தும், மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்தும், சுகம்யா பாரத் அபியான் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பெண்குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் திட்ட செயல்பாடுகள் குறித்தும், மாவட்ட முன்னோடி வங்கி மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 நபர்களுக்கு தலா ரூ.7600/- வீதம் ரூ.30,400/- மதிப்பில் மூன்று சக்கரப்பொருத்தப்பட்ட வண்டிகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 6 நபர்களுக்கு தலா ரூ.6500/- வீதம் ரூ.39,000/- மதிப்பில் இலவச தையல் இயந்திரங்களையும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பெரோஸ்கான் அப்துல்லா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.பொ.சந்திரசேகர், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) திரு.ராஜராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.சந்தானம் மற்றும் அனைத்துத்துறைகளைச் சேர்ந்த மாவட்ட நிலையிலான அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**